பக்கங்கள் 6 விலை சதம் 40 ★★

# ஈழநாடு

The EELA NADU

மலர்: 19 ஆடி 22 ஷஃபான்: 20 இதழ்: 176

யாழ்ப்பாணம் சனிக்கிழமை 6-8-77

யாழ். ரோட்டரி
கா ணி வ ல்
இலவசக் காட்சிகள்
சென். பற்றிக்ஸ்கல்லூரி
மைதானம்
30-7-77 — 10-8-77
திகிலூட்டும் நெருப்பில் பெண்ணின் பயங்கரபாய்ச்சல். 'பப்பட்' காட்சி கரகாட்டம். மாயா ஜால வித்தைகள். பொப் நிகழ்ச்சிகள்.
தினமும் நடைபெறும்.

அண்ணா கோப்பியை
உடனுக்குடன் உங்கள் முன்னிலையில் சுவைகுன்றாது நறுமணத்துடன் வறுத்து அரைத்துப்பெற்றுக்கொள்ள
அண்ணா
கோப்பிக்கடை
இல. 1 மத்திய சந்தை
சுன்னாகம்.

# சவர்க்காரத் தட்டுப்பாடு

# விரைவில் நீங்கும்

## உடனடியாக உற்பத்தியை அதிகரிக்க நடவடிக்கை

கொழும்பு, வெள்ளி
சவர்க்கார உற்பத்தியை உடனடியாக அதிகரிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

கைத்தொழில் அமைச்சர் திரு. சிறில் மத்யூ சவர்க்கார உற்பத்தியை அதிகரிக்குமாறு [illegible] பிரதான சவர்க்கார உற்பத்தி நிறுவனங்களைப் பணித்துள்ளார்.

மாதாந்தம் 1125 தொன் சவர்க்காரங்களை உற்பத்தி செய்யுமாறு 'லிவர்' நிறுவனத்திற்கும் மாதாந்தம் 448 தொன் சவர்க்காரங்களை உற்பத்தி செய்யுமாறு 'பி. பி. சி' நிறுவனத்திற்கும் அமைச்சர் உத்தரவிட்டுள்ளார்.

### கொழுப்பு இறக்குமதி

சவர்க்கார உற்பத்திக்குப் பயன்படுத்தப்படும் மிருகக் கொழுப்பு 600 தொன்னில் இருந்து 1000 தொன்வரை வெளிநாடுகளில் இருந்து இதன் பொருட்டு இறக்குமதிசெய்யப் படவுள்ளன.

ஏற்கனவே இரண்டுகோடி ரூபா பெறுமதிவாய்ந்த மிருகக் கொழுப்பு ஏற்கனவே இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. (உ)

# யாழ்ப்பாணத்தில் பகற் கொள்ளையர்!

## பொலிஸ் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், சனி
யாழ்ப்பாணத்தில் பகல் நேரத்தில் திருடர்கள் வீட்டுக்குள் புகுந்து வீட்டுக்காரர்கள் கவலையீனமாக இருக்கும் நேரம் பார்த்து விலையுயர்ந்த பொருட்களைத் திருடிச் செல்வதாக பொலிஸில் புகார்செய்யப்பட்டுள்ளது.

வீட்டுச்சொந்தக்காரர்கள் வேறு வேலைகளில் கவனம் செலுத்திக் கொண்டிருக்கும் சமயங்களில் வீட்டிலுள்ள றேடியோ, கடிகாரம் போன்ற பொருட்களை இவர்கள் திருடிச் செல்வதாகக் கூறப்படுகிறது.

இப்படியான திருடர்கள் பற்றி எச்சரிக்கையாக இருக்கும்படி பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. தாமோதரம்பிள்ளை வேண்டுகோள் விடுத்துள்ளார். (க)

## பேரவை கூடும்

(கொழும்பு)

தேசிய அரசுப்பேரவை இம்மாதம் 18ம் திகதி மீண்டும் கூடும். (இ)

உடுவில் கொள்ளை வழக்கு:

## காரணம் காட்டுமாறு

### சட்டமா அதிபருக்கு நோட்டீஸ்

கொழும்பு, வெள்ளி
உடுவில் கொள்ளை வழக்கை யாழ். மேல் நீதி மன்றத்தில் விசாரணை செய்யக் கூடாது என்பதற்கு காரணம் காட்டுமாறு சட்ட மா அதிபர் திரு. சிவா பசுபதிக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் நோட்டீஸ் பிறப்பித்துள்ளது.

நீதியரசர்களான திருவாளர்கள் ரி. டபிள்யு. ராஜரத்தினம், நோயல் தித்தவெல டி குணசேகரா ஆகியோர் முன்னிலையில் விசாரணை நடைபெற்றபோது மேற்படி நோட்டீஸ் பிறப்பிக்கப்பட்டது,

இவ்வழக்கின் சந்தேக நபர்களான பரமேஸ்வரன், விஸ்வசோதி ரத்தினம் ஆகியோர் சார்பில் சட்டத்தரணி ஏ. வி. எஸ். புள்ளைநாயகம் ஆஜராயிருந்தார். (ம)

## ப. நோ. கூ. ச. ஊழியருக்கு 6 மாதக் கடூழியம்!

வண்ணார்பண்ணை, வெள்ளி
அரை ரூத்தல் அரிசி நிறை குறைத்து விநியோகித்த பலநோக்குக் கூட்டுறவுச் சங்ககிளை ஊழியர் ஒருவருக்கு ஆறு மாத சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது,

பங்கீட்டரிசியை நிறை குறைத்து விநியோகித்ததாக நீர்வேலியைச் சேர்ந்த பலநோக்குக் கூட்டுறவுச் சங்ககிளை ஊழியர் ஒருவர் மீது, யாழ் மாவட்ட விலைக்கட்டுப்பாட்டதிகாரியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

யாழ்ப்பாண நீதவான் நீதிமன்ற நீதிபதி திரு. கே. வி. நவரத்தினம் முன்னிலையில் விசாரணைக்கெடுத்தபோது நீதிபதி எதிரிக்கு 6 மாத சிறைத்தண்டனை விதித்தார். (க)

அரசியல் அதிகாரிகளின் கடமைகள்:

## அரசாங்க அதிபர்களிடம் ஒப்படைக்க முடிவு

கொழும்பு, வெள்ளி
மாவட்டங்களில் அரசியல் அதிகாரிகள் இப்போது இல்லாமையால் அவர்கள் ஆற்றிய பணிகள் எம். பிக்களின் ஆலோசனைக்கமைய அந்தந்த மாவட்ட அரசாங்க அதிபர்களிடம் ஒப்படைக்கப்படும். அமைச்சரவைக் கூட்டத்தில் இம்முடிவு எடுக்கப்பட்டது.

## தொலைத்தொடர்புகள் புனரமைக்கப்படும்

### அமைச்சர் நடவடிக்கை

கொழும்பு, வெள்ளி
நாட்டின் தொலை தொடர்பு சேவைகள் புனரமைப்புச் செய்யப்படவிருக்கின்றன.

இதற்கான நடவடிக்கைகளை தபால் தந்தி தொலைபேசி தொடர்புகள் அமைச்சர் திரு. ஷெல்டன் ஜெயசிங்க மேற்கொண்டுள்ளார்.

உப-தபாலதிபர்களை தரமுயர்த்துவது தொடர்பாகவும் ஆராயப்பட்டதாக அறியப்படுகிறது. (உ)

உள்ளூராட்சி

## எழுதுவினைஞர்கள் இன்று திருமலையில் கூடுகின்றனர்

யாழ்ப்பாணம், சனி
உள்ளூராட்சி எழுதுவினைஞர் சங்கத்தின் வருடாந்த மாநில மாநாடு இன்று திருகோணமலை நகரமண்டபத்தில் நடைபெறுகின்றது.

இம்மாநாட்டில் கலந்து கொள்வதற்காக யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், கொழும்பு ஆகியபிரதேசங்களிலிருந்து பெருந்தொகையான உறுப்பினர்கள் கலந்து கொள்வார்கள். தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஆதரவில் இயங்கும் மொழிவழித் தொழிற் சங்கத்தில், உள்ளூராட்சி எழுதுவினைஞர் சங்கம் சேர்ந்து கொள்வதுபற்றிய முக்கிய தீர்மானங்கள் இம்மாநாட்டில் நிறைவேற்றப்படவுள்ளன. (கெ-அ)

## யாழ்ப்பாணத்தில் பவுண் விலை

யாழ்ப்பாணம், சனி
யாழ்ப்பாணத்திலுள்ள நகை வியாபாரிகள் பவுண்களைக் கொள்முதல் செய்யும்போது 500 முதல் 5 5 ரூபா வரை வாங்குகிறார்கள். விற்கும்போது 600 ரூபாவுக்கு விற்கின்றனர். புதிய அரசாங்கம் பதவிக்கு வந்த பின்னர் பவுண்விலையில் மாற்றமேற்பட்டுள்ளது. முன்னர் 700 ரூபா முதல் 725 வரை பவுணை விற்ற நகை வியாபாரிகள்வாங்கும் போது பவுணுக்கு 600 ரூபாவரை கொடுத்தார்கள். (கெ-அ)

## யாழ். இந்து சாரணர் ஆண்டு விழா

யாழ்ப்பாணம், சனி
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி சாரணர் குழு 61-வது ஆண்டு விழா நாளை மறுதினம்

(6ம்பக்கம் பார்க்க)

# 'அமிருக்கு' பலாலியில் ஞாயிறன்று வரவேற்பு

யாழ்ப்பாணம், சனி
எதிர்க்கட்சித் தலைவராக ஆட்சிமன்றத்தில் பதவி ஏற்றுக்கொண்டதன்பின் யாழ்ப்பாணத்திற்கு முதல்தடவையாக வருகை தரும் தமிழர் கூட்டணியின் செயலதிபர்களில் ஒருவரும் காங்கேசன்துறை எம்.பி.யுமான திரு.ஏ. அமிர்தலிங்கத்திற்கு பிரமாண்டமான வரவேற்புக்காத்திருக்கிறது.

இப்பிரமாண்டமான வரவேற்பு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை அவர்பலாலி விமானநிலையத்தை வந்தடையும்போது அளிக்கப்படும்.

இதற்கான விரிவான ஏற்பாடுகளை தமிழர் விடுதலைக் கூட்டணியினரும் தமிழ் இளைஞர் பேரவையினரும், மகளிர் பேரவையினரும் செய்துவருகின்றனர்.

விமான நிலையத்தில் வாஞ்சையோடு வரவேற்கப்படும் திரு. 'அமிர்' மயிலிட்டி ஊடாகமாவிட்டபுரம் ஸ்ரீகந்தசுவாமி கோவிலுக்கு அழைத்து வரப்படுவார்.

அங்கு நடைபெறும் விசேட பூசையிலும் திரு. 'அமிர்' கலந்து கொள்வார்.

இலங்கை அரசியல் வரலாற்றில் முதல் தடவையாக எதிர்க்கட்சித்தலைவர் பதவி ஏற்ற முதல் தமிழர் என்பதாலும் தமிழர் நிலைபற்றி அவர் ஆட்சிமன்றக் கூட்டத்தொடரின் போது ஆணித்தரமாக எடுத்துரைத்ததாலும் இவ்வரவேற்பு யாழ்ப்பாண வரலாற்றில் இணையில்லாத வகையில் அமையுமென்றும் வரவேற்பு ஏற்பாடுகளில் ஈடுபட்டுள்ள கூட்டணிப்பிரமுகர் ஒருவர் தெரிவித்தார். (கா-உ)

### மணிவாக்கு

மனிதனுக்கு பற்றுதலால் விருப்பமும், விருப்பத்தால் சினமும், சினத்தால் மயக்கமும், மயக்கத்தால் புத்திநாசமும், புத்திநாசத்தால் அழிவும் ஏற்படுகின்றது.

—பகவத்கீதை.

ஈழநாடு
THE EELANAADU

# புதிய கொள்கை

மிகப் பெரும்பான்மைப் பலத்துடன் ஆட்சிபீடத்துக்கு வந்துள்ள புதிய ஐக்கியதேசியக்கட்சி அரசாங்கம் தனது கொள்கைத்திட்டத்தை வெளியிட்டுள்ளது.

அரசியல், பொருளாதாரம், சமூகப்பிரச்னைகளையும் வெளிவிவகாரக் கொள்கையையும் அரசாங்கம் தனது கொள்கைவிளக்கத்தில் தெரிவித்திருக்கிறது.

ஜனாதிபதியின் பிரசங்கத்துக்கு நன்றி தெரிவிக்கும் பிரேரணைமீது விவாதம் நடைபெறவிருக்கிறது. இந்த விவாதத்தின்போது எதிர்க்கட்சியாகவிருக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் அரசின் கொள்கைகள்பற்றி எப்படியானகருத்தைக் கொண்டிருக்கிறார்களென்பதையும் எதிர்க்கட்சியில் தனித்தியங்க முடிவு செய்துள்ள முன்னைய ஆட்சியாளர்களான சிறிலங்கா சுதந்திரக்கட்சியினரின் கருத்து என்னவென்பதையும் தெரிந்துகொள்ளலாம்.

புதிய அரசின். கொள்கைகள்பற்றி விரிவாக ஆராயுமுன் தங்களது கொள்கையை மிகத் தெளிவாக விளக்கியிருப்பதைப் பாராட்டவேண்டும்.

இலங்கைவாழ் தமிழ் பேசும் மக்களுக்குப் பிரச்னைகள் இல்லையென்றும்பிரச்னைகள் யாவும் தீர்க்கப்பட்டுவிட்டனவென்றும் 1956-ம் ஆண்டின்பின் பலரும் பல தடவைகளில் கூறிவந்திருக்கின்றனர்.

சிறிதுகாலத்துக்கு முன்னர்தான் தமிழ்பேசும் மக்களுக்குப் பிரச்னைகள் இல்லாமலில்லை என்று கூறி அதை ஒப்புக்கொண்டதுடன் பேச்சுவார்த்தைகள் மூலம் அவற்றுக்குத் தீர்வு காணலாமென்றும் தெரிவித்தனர்.

என்றாலும் தமிழ்பேசும் மக்களின் பிரச்னைகள் அதிகரித்தனவே தவிர அவற்றைத் தீர்ப்பதற்கான வழிமுறைகள் காணப்படவில்லை.

தமிழ்மக்களுக்குப் பிரதிநிதித்துவம் வகிக்கும் தமிழர்விடுதலைக்கூட்டணியினர் ஆறு அம்சத் திட்டமொன்றைத் தயாரித்து முன்னைய பிரதமருக்கு அனுப்பிப் பேச்சுவார்த்தைக்குத் தயாராக இருந்தபோதும் அதற்குரிய முயற்சிகளை மேற்கொள்ள முன்னைய அரசு தவறிவிட்டது.

கட்சி அரசியலில் சம்பந்தப்படாத பிரமுகர்கள் சிலர் சேர்ந்து இருபது அம்சத் திட்டமொன்றைத் தயாரித்து மேற்கண்ட முயற்சிகளும் கூட வெற்றியளிக்கவில்லை.

ஆனால் புதிய அரசாங்கம் தனது கொள்கைத் திட்டத்தில்—

“தமிழ்பேசும் மக்களைப் பல பிரச்னைகள் எதிர்நோக்குகின்றன என்பதை அரசாங்கம் ஏற்றுக்கொள்கிறது” என்று கூறப்பட்டுள்ள ஒரு வாசகமே அரசாங்கம் ஆக்கபூர்வமாக பிரச்னைகளை அணுகுவதற்கு ஆயத்தமாக இருக்கிறதென்பதை எடுத்துக்காட்டுவதாக இருக்கிறது.

“தமிழ்பேசும் மக்களைப் பல பிரச்னைகள் எதிர்நோக்குகின்றன என்பதை எனது அரசாங்கம் ஏற்றுக்கொள்கிறது. அவர்களது பிரச்னைகளுக்குத் தீர்வொன்று ஏற்படாமையானது ஒரு தனியரசை உருவாக்குவதற்கான ஓர் இயக்கத்தைக்கூட தமிழ்மக்கள் ஆதரிக்கும் நிலையைத் தோற்றுவித்துள்ளது. முழுநாட்டினதும் பொருளாதார அபிவிருத்திக்கு மிகவும் அவசியமான தேசிய ஒருமைப்பாடு, ஒற்றுமை என்பனவற்றின் நலன்கருதி, அத்தகைய பிரச்னைகள் காலதாமதமின்றி தீர்த்துவைக்கப்படவேண்டுமென அரசாங்கம் உணர்கிறது. அத்துடன் பின்வரும் துறைகளில் அவர்களுக்குள்ள குறைபாடுகளுக்குப் பரிகாரம் காண்பதற்குச் சாத்தியமான எல்லா நடவடிக்கைகளையும் அரசாங்கம் மேற்கொள்ளும்.

**(1) கல்வி, (2) குடியேற்றம், (3) தமிழ்மொழிப் பிரயோகம், (4) அரசாங்க கூட்டுத்தாபனங்களிலும் அரசாங்கச் சார்புடைய கூட்டுத்தாபனங்களிலும் தொழில் வாய்ப்பு.**

இப்பிரச்னைகளுக்குத்தீர்வு காணும்பொருட்டு எனது அரசாங்கமானது சர்வகட்சி மாநாடொன்றைக் கூட்டி, அதன் தீர்மானங்களைச் செயற்படுத்தும்” என்று ஜனாதிபதி தமது பிரசங்கத்தில் கூறியிருக்கிறார்.

தமிழ்மக்களுக்குப் பிரச்னைகள் இல்லாமலில்லை என்று கூறியவர்களும்கூட எந்தெந்த விஷயங்களில் அவர்களுக்குப் பிரச்னைகள் இருக்கின்றனவென்பதைக் கூறவில்லை.

ஆனால் புதிய அரசாங்கம் தமிழ்மக்களின் பிரச்னைகள் என்னவென்பதைத் தெரிந்துகொண்டிருக்கிறது. அதற்குத் தீர்வுகாணவும் முன்வந்திருக்கிறது.

புதிய அரசு நிலைமையைத் தெரிந்துகொண்டு நட்புக்கரம் நீட்டியிருக்கிறது. அதைப் பற்றிப் பிடித்துப் பார்ப்பதில் நட்டமொன்றும் தமிழ்மக்களுக்கு ஏற்பட்டுவிடப்போவதில்லையே!

# அமிரும் ஜே. ஆரும் எதிரெதிரே அமர்ந்திருந்தனர்

(கொழும்பு)

தேசிய அரசுப் பேரவையில் பிரதமர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவும் எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கமும் எதிர் எதிரே அமர்ந்திருந்தனர்.

திரு. அமிர்தலிங்கத்திற்கு இடதுபக்கத்தில் முன்னாள் பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயக்கா அமர்ந்திருந்தார்.

திரு. அமிர்தலிங்கத்திற்கு அருகில், திருவாளர்கள் எஸ். சிவசிதம்பரம், எஸ். இராசதுரை, வி. என். நவரத்தினம் ஆகியோர் அமர்ந்திருந்தனர். மற்றையோர் பின் ஆசனத்தில் அமர்ந்திருந்தனர்.

## ஜனாதிபதியின் கொள்கை திட்டவுரை

# ஒழுக்கப் பிரச்னை தீராமல் எதுவும் சாதிக்கவியலாது

இலங்கைக் குடியரசு தேசிய அரசுப் பேரவையின் 2வது ஆட்சிமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடர் நேற்று முன்தினம் ஆரம்பமானபோது ஐக்கியதேசியக்கட்சி அரசின் கொள்கைத்திட்ட உரையை ஜனாதிபதி திரு. வில்லியம் கோபல்லாவ நிகழ்த்தினார். அரசின் கொள்கைத்திட்டம் இங்கு பிரசுரிக்கப்படுகிறது.]

சபாநாயகர் அவர்களே! தேசிய அரசுப் பேரவை உறுப்பினர்களே!

எமது தலைவிதியை நாமே நிர்ணயிப்பதற்கான சந்தர்ப்பத்தை எமக்குப் பெற்றுத்தந்த சுதந்திரமானது கிடைக்கப்பெற்றதுதொட்டு முப்பது ஆண்டுகள் கழிந்துள்ளன. அடுத்தடுத்து வந்த அரசாங்களினால் அரசியல். பொருளாதார வேலைத்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டுள்ளபோதிலும், அவை மக்கள்மீது விரும்பிய தாக்கத்தைஉண்டுபண்ணியுள்ளதாகத் தெரியவில்லை. இதற்குமாறாக, மனித ஒழுக்கப்பண்புகள் கீழ்நிலையை அடைந்துள்ளன. இந்நாட்டைப் பீடித்துள்ள தாழ்நிலை ஒழுக்கப் பிரச்னையைத் தீர்க்காது எதனையும் சாதிக்கவோ பேணிவரவோ இயலாது என எனது அரசாங்கம் கருதுகின்றது.

இலங்கையில் வறுமைப்பிணியை அகற்றுவதற்கு அபிவிருத்தித் திட்டங்கள் மாத்திரமன்றி, இத்திட்டங்களை நேர்மையாகவும், நியாயமாகவும் செயற்படுத்தக்கூடிய, மனஉறுதி பூண்ட, ஊழல்களுக்கு அப்பாற்பட்ட ஆண், பெண் ஆகிய இருபாலாரும் அவசியமாவர்;

எனவே, அரசாங்கமானது, புதியதொரு இலட்சியத்தை வகுக்கவேண்டியுள்ளது. மனித ஒழுக்கப்பண்புகளை அடிப்படையாகக் கொண்டதொரு புதியசமுதாயத்தைத் தோற்றுவித்தலே அவ் இலட்சியமாகும்.

இம்முன்னேற்றப்பாதையில் எம்மை இட்டுச்செல்லும் ஒரு நடவடிக்கையாகவே, எனது அரசாங்கமானது, பௌத்த சமயம், கிறிஸ்தவ சமயம், இந்து சமயம், இஸ்லாமிய சமயம் ஆகிய எல்லா மதங்களையும் ஊக்குவித்தும் வளர்த்தும் வரும்.

ஒற்றுமைபேணும், உற்சாகமூட்டும் பாங்குடைய பௌத்தமதப் போதனைகளின் செல்வாக்கால், இலங்கையானது, தனது தனித்துவத்தையும், நாகரிகத்தையும் எவ்வித இடையீடுமின்றி கடந்த 2,500 ஆண்டுகளாகப் பேணி வந்துள்ளது. எமது உத்தேச அரசியலமைப்பின்கீழ், எல்லா மதங்களினதும் உரிமைகளுக்கு உத்தரவாதமளிக்கும் அதேவேளையில், எனது அரசாங்கமானது, மேற்குறிப்பிட்ட செல்வாக்கைத் தொடர்ந்து நிலைநிறுத்த முனைந்து செயற்படும். இவ்வாறாக எல்லா மதங்களினதும் தோற்றங்களும், சடங்குகளும் பின்பற்றப்படுதல் மாத்திரமன்றி, மாபெரும் மத ஆசாரியர்களால் போதிக்கப்பட்ட ஒழுக்கப் போதனைகளானவை, கல்வி முறைமையினதும், நாளாந்த வாழ்க்கை முறையினதும் அடிப்படைகளாக அமைவதும் உறுதி செய்யப்படும்.

எனவே, எனது அரசாங்கமானது, உத்தேச அரசியலமைப்பில், மக்களில் பெரும்பான்மையினரின் மதமான பௌத்த சமயத்துக்குரிய இடத்தை உறுதிசெய்வதுடன், பௌத்த சமயத்தைப் பேணி வளர்த்தலை அரசின் கடமையொன்றாகவும் ஆக்கும். இதேவேளை, ஏனைய மதங்கள் யாவற்றினதும் நீதியான உரிமைகளுக்கு உத்தரவாதமளிக்கப்படும்.

எல்லாப்பிள்ளைகளும், தத்தமது முதனிலைக் கல்வியை. தேசிய, மதச் சூழலில் பெற்றுக்கொள்வதை உறுதிசெய்தற்கும், அதன்பின்னர், கல்விமுறையில் மதக் கல்வியானது ஓர் அத்தியாவசிய அம்சமாக அமைவதை உறுதிசெய்தற்கும், எல்லாமதச் சாரார்களினதும் உதவியும், ஒத்துழைப்பும் பெறப்படும். மேலும் பிரிவேனா கல்விமுறையை மீள ஒழுங்கமைப்பதற்கும், அதற்குப புத்துயிர் அளிப்பதற்கும் ஏற்பாடுகள் செய்யப்படும்.

மனித நாகரிகம் வளர்ச்சியடைந்துள்ள நாடுகளும், மக்கள் இனங்களும் பின்பற்ற விழைந்து நிற்கும் ஒழுக்கக் கோட்பாடுகளையும், ஒழுக்கத் தராதரங்களையும் உருவாக்குவதில் எல்லா மதங்களும் பங்கு நல்கியுள்ளன என்று எனது அரசாங்கம் திடமாக நம்புகின்றது. நாளாந்த வாழ்க்கை முறையானது மத போதனைகளின் செல்வாக்கிலிருந்து அறவே விடுபட்டிருக்குமிடத்து, இவ்வொழுக்கத் தராதரங்களும். ஒழுங்கு நடத்தையும் சீர்குலைவு அடைகின்

(6ம் பக்கம் பார்க்க)

# பகவான் ஸ்ரீநீலகண்டபாபா

-- ஸ்ரீ சத்யதாஸன் --

கடவுளின் தெய்வீக அவதாரமாகத் தோன்றிய பகவான் ஸ்ரீ நீலகண்ட பாபா, ஆந்திரா மாநிலத்தில் கர்நூல் மாவட்டம், அதோனித் தாலுகா, ஓம் நகர் என வழங்கும் கிராமத்திலுள்ள பிரசாந்தி மந்திர ஆஸ்ரமத்தில் வாதனையும், வேதனையும் கொண்டு அண்டியவர்களுக்கும், சரணடைந்தவர்களுக்கும் புகலிடமளித்து, மனச்சாந்தி நல்கி, சமூக க்ஷேமத்திற்காகப் பாடுபட்டுவருகிறார். அநேகர் தமது எண்ணிலாக் குறைகள் எல்லாம் நீக்கப்பட்டும், நோய், பிணி துன்பமெல்லாம் தீர்க்கப்பட்டும் சந்தோஷத்துடன் திரும்புகின்றனர்; மனச்சாந்தியுடன் வாழ்கின்றனர்.

அவரின் தோற்றம் காந்தத்தினால் இழுக்கப்பட்ட ஊசியினைப்போல் எங்கள் மனம், உடல், உயிர் அத்தனையையும் இழுத்து, நாம் வசீகரிக்கப்பட்டுவிடுகிறோம். எங்களின் உடலில், உள்ளத்தில் உள்ள நோய், பிணி, பீடை, சஞ்சலம், கிலேசம், துன்பம், துயர் எல்லாமே எங்களை விட்டுப்போகும். நிம்மதி ஏற்படுகிறது அவரது பார்வையினால் நாங்கள் புனிதராகிறோம். அவரின் புன்னகை தவழும் தெய்வீகக் களையுடன் கூடிய முகம், குழந்தையுள்ளம், தாயுள்ளம் படைத்த இருதயத்தின் பிரதிபலிப்பு, சிவப்பு அங்கியுடன் கூடிய எடுப்பான உடலுருவம் என்றும் மறக்க முடியாததும், மனதை விட்டகலாததுமாகும். செல்வந்தர், ஏழைகள் என்ற பாகுபாடின்றித் தமது திருவருள் கருணையை எல்லோருக்கும் வாரி வழங்கிக்கொண்டிருக்கிறார் அவர். ஒரு முறை தரிசித்தால்போதும் அப்படியே அவருடைய அருள் கிரணக் கதிர்களில் கவரப்பட்டு இழுக்கப்பட்டுவிடுகின்றோம்.

பாபா 40 ஆண்டுகளுக்கு முன் அதோனிக்கருகே உள்ள சிக்கத்தும்பாலா என்னும் கிராமத்திலே ஓர் ஏழை விவசாயக் குடும்பத்தில் வீரப்பா-சாந்தம்மா தம்பதிகளின் 3 வது புத்திரராக அவதரித்தார். இவருக்கு நீலகண்டன் என்னும் பெயரைச் சூட்டினார்கள்.

### சிறு வயதில் ஆத்ம விசாரணை

'தந்தை சொல் மிக்க மந்திரமில்லை' என்ற முது வாக்கியத்துக்கிணங்கத் தம் பெற்றோர் சொல்லிக்கொடுத்த 'ஓம் நமசிவாய' என்னும் மந்திரத்தை எப்பொழுதும் ஜெபம் செய்துகொண்டு, எச்செய்கையிலும் நமசிவாயத்தைக் குறியாக வைத்து ஜபித்து வந்தார். தாயார் 8 வயதிற் காலமானார். தாயாரின் பிரேதத்தைச் சுடுகாட்டிற்கு எடுத்துச்செல்லும் கூட்டத்தினரைப் பார்க்க நேர்ந்த பிள்ளை தகப்பனை நோக்கி, “சாவு என்றால் என்ன? எப்படி ஏற்பட்டது?” என்று வினவ, “இது கடவுளின் விளையாட்டு, அவர்தான் உனக்குத் தகுந்த விடையை அளிக்கவேண்டும்” என்றார். இப்படி ஆத்ம விசாரணை செய்துகொண்டு தன் குடும்பத்தாருடன் உழுது பயிரிட்டும், வறுமையால் வாடியும் அநேக கஷ்டங்களை அனுபவித்தும் வந்தார்.

இக்கட்டான நிலையிலும் கூட நமசிவாயத்தைக் கைவிடவில்லை. தந்தையாரும் இறந்தார். நீலகண்டனுக்குக் கடவுளைக்காண வேண்டும் என்ற துடிப்பும்அதிகமாயிற்று. ஒன்றையும் மனம் நாடவில்லை சிவனைக் காணவேண்டும் என்று பித்துப்பிடித்தவனானான்.

### சிவலிங்க ஜோதிக்காட்சி

சிவனைக்காண ஸ்ரீசைலத்துக்கு ஓடினார். ஸ்ரீசைலத்திற்கு சமீபத்தில் உள்ள கதலீவனம் செல்லும் வழியில் குருஜார் என்னும் ஊர்வந்தது இந்த ஊரில் தங்குவோம் என்று அவரது அந்தராத்மா ஒலித்தது.

அவ்வாறே தங்கி அங்குள்ள இராமலிங்கேசுரர் கோவிலிலுள்ள ஆறு சிவலிங்கங்களையும் நாள் முழுவதும் பூஜை ஆராதனை செய்து வந்தார். ஒருநாள் வைராக்கிய பக்தியுடன் இன்றே சிவனைக்கண்டால் வாழ்வு அன்றேல் சாவு என்று உறுதி கொண்டார். பகல் பூஜை முடிந்தது. சிவனைக் காணவில்லை இரவு வந்தது. எங்கும் நிசப்தம் நீலகண்டன் சிவனை இன்னும் காணாததால் சிவலிங்கத்தின் மீது தனது உயிரை மாய்ப்பது என்ற வைராக்கியத்துடன் பூஜை முடிவில் சிவலிங்கத்தின் மீது தனது தலையைப் பலமாக மோதிக்கொண்டார். என்ன ஆச்சரியம். ஆறு சிவலிங்கங்களினது கண்கள் அப்போது திறந்தன கண்களினின்றும் ஒரு ஜோதியானது கிளம்பி நீலகண்டனின் உடலில் கலந்து 'நான் இங்கும் எங்கும் இருக்கிறேன். நாமிருவரும் ஒருவர் உன்னிடமிருந்து என்னை யாராலும் பிரிக்க இயலாது என ஓர் அசரீரி வாக்கு ஒலித்தது அன்று முதல் நீலகண்டன் அபூர்வ தெய்வீக செயல்களையும், அற்புதங்களையும் செய்யும் சக்தியையும் பெற்றார்.

[நாளை ஸ்ரீ நீலகண்டபாபா தினமாகும்.] (அ)

இந்தியாவில் நெருக்கடிநிலை அநீதிகள்:

# 40,000 புகார்கள் குறித்து விசாரணை நடத்த ஆணைக்குழு நியமனம்

## செப்டம்பர் முற்பகுதியில் விசாரணை ஆரம்பம்

புதுடில்லி, ஆக 5

பாரதத்தில் அவசரகாலச் சட்ட விதிகள் அமுல் செய்யப்பட்டிருந்த வேளை நடைபெற்ற அநீதிகள், ஊழல்கள் தொடர்பாக அரசுக்கு 40,000 புகார்கள் கிடைத்துள்ளன

இப்புகார்கள் தொடர்பாக அரசாங்க ஆணைக்குழு ஒன்று விசாரணை நடத்தவிருக்கிறது.

இக்குழுவின் தலைவராக இளைப்பாறிய உயர் நீதிமன்ற நீதிபதி கே. சி. ஷா நியமிக்கப்பட்டுள்ளார்.

அடுத்த மாத முற்பகுதியில் இவ்விசாரணைக்குழு விசாரணையை ஆரம்பிக்கும்.

முன்னாள் பிரதமர் திருமதி இந்திரா காந்தியினால் 1975-ம் ஆண்டு ஜூன் மாதம் அவசரகாலநிலை பிரகடனம் செய்யப்பட்டது. (உ)

## எஸ். எஸ். ஆர். வழக்கு விசாரணை ஒத்திவைப்பு

சென்னை, ஆக. 5

இலட்சிய நடிகர் எஸ். எஸ். ராஜேந்திரன் கொலைமுயற்சி வழக்கு மேல்விசாரணை செப்டெம்பர் மாதம் முதலாம்திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இவ்வழக்கில் தி. மு. க. தலைவர் கலைஞர் மு. கருணாநிதி உட்பட 43 பேர்மீது கொலை முயற்சிக் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டிருந்தது.

போதிய சாட்சியங்கள் இல்லாமையால் ஏற்கனவே 37பேர் விடுதலை செய்யப்பட்டிருந்தனர்

கலைஞர் கருணாநிதி, முன்னாள் மாநில அமைச்சர் கண்ணப்பன் உட்பட ஆறுபேர் மீது தொடர்ந்து விசாரணை நடைபெற்றது. (கெ-உ)

## மதுவிலக்கு அமுல்: எம். ஜி. ஆர். தீவிரம்

சென்னை, ஆகஸ்ட் 5

அரசாங்க மதுவிலக்கு கொள்கைக்கு எதிராகச் செயற்படும் அதிகாரிகளைக் கண்டுபிடித்து அவர்களைத் தண்டிக்க தனி அமைப்புக்குழு ஒன்றை தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் நியமித்துள்ளார்.

'தமிழ்நாட்டில் பூரண மதுவிலக்குச் சட்டத்தை அமுல் நடாத்துவதற்கு நாட்டுப்பற்றில்லாமல் அதற்கு மாறாக நடப்பவர்கள் எவராகிலும் தண்டிக்கப்பட வேண்டும்' என்று முதலமைச்சர் கூறியுள்ளார். (கெ-உ)

## பெருமழை: 13 பேர் மரணம்

புதுடில்லி, ஆக. 5

குஜராத் மாநிலத்தில் ஏற்பட்ட பெருமழையால் 13 பேர் மாண்டதாக அறிவிக்கப்படுகிறது. (உ)

## மூன்றுவது மண்டல நாடுகளுக்கு லுஸாக் நிறுவன உதவி இரட்டிப்பாகும்

லண்டன், ஆக. 5

லுஸக் நிறுவனம் மூன்றுவது மண்டல நாடுகளுக்குதான் வழங்கும் உதவியை இரட்டிப்பாக்கவிருக்கிறது.

80 கோடி டாலர்களை இந்த வகையில் ஓஸக் நிறுவனம் 160 டாலர்களாக அதிகரித்து வழங்கும்

வியன்னாவில் கூடிய லுஸக் நிறுவனத்தின் தலைமையக நிதியமைச்சர்கள் கூட்டத்தில் இம்முடிவு எடுக்கப்பட்டது. (உ)

## 'தமிழுக்கே என்ஜீவன் அர்ப்பணம்' சட்டசபையில் கலைஞர் உரை

சென்னை, ஆக. 5

"நான் கோழையாக சாகமாட்டேன். என் உயிர் தமிழுக்கு தமிழ் நாட்டிற்கு - தமிழ் சமுதாயத்திற்காகவேபோகும்' என்று கலைஞர் மு. கருணாநிதி தமிழநாடு சட்டப்பேரவையில் நிதி நிலை மசோதா மீது பேசுகையில் குறிப்பிட்டார்.

நான் கோழையல்ல எனது இனத்தின் நல்வாழ்வுக்காக அனறும் இன்றும் போராடி வருகின்றேன். என்றோ ஒரு நாள் என் உயிர் போயேதீரும். அது என் தமிழ்தாயின் நல்வாழ்வுக்காக போவதையே விரும்புகிறேன்.

தேர்தல் மேடைகளில் தி. மு. க. நாலு ஆசனங்களைக்கூட பெறமுடியா தென்றார்கள். இன்று பலம்வாய்ந்த எதிர்க்கட்சியாக இருக்கின்றது கோழையாக இருந்தால் இப்படிச்சாதனை புரியமுடியுமா என்று கருணாநிதி மேலும் பேசுகையில் கூறினர்.

மத்திய கிழக்குப் பிரச்னை:

## அமெரிக்க — எகிப்திய ஆலோசனையை சிரியா நிராகரித்தது

லண்டன், ஆக 5

மத்திய கிழக்குப் பிரச்னை தொடர்பாக மத்திய கிழக்கில் உள்ள வெளிநாட்டமைச்சர்கள் கூடிஆராய வேண்டும் என்ற அமெரிக்காவும் எகிப்தும் தெரிவித்த ஆலோசனையை சிரியா நிராகரித்துள்ளது.

மத்திய கிழக்குப் பிரச்னை தொடர்பாக ஜெனீவா மாநாடு கூட்டப்படும் வகையில் மத்திய கிழக்கு நாடுகளின் வெளிநாட்டமைச்சர்களின் கூட்டம் ஒன்று நடைபெற வேண்டும் என்று அமெரிக்காவும், எகிப்தும் ஆலோசனை கூறியிருந்தன. இந்த ஆலோசனையை ஏற்றுக் கொள்ளமுடியாது என்று சிரிய ஜனாதிபதி அறிவித்துள்ளார்.

கங்கை நீர்ப் பிரச்னை:

## இந்திய — பங்களாதேஷ் பேச்சுவார்த்தையில் முன்னேற்றம்?

டாக்கா, ஆக. 5

கங்கைநீர்தொடர்பாக பாரதத்திற்கும் பங்களாதேஷுக்கும் இடையே டாக்காவில் பேச்சுவார்த்தைகள் தொடர்ந்து நடைபெற்றுவருகின்றன.

பாரதக் குழுவுக்கு திரு. ஜெகத்மேத்தாவும் பங்களாதேஷ் குழுவுக்கு திரு. பாஸு தலைமைவகிக்கின்றனர்.

பேச்சுவார்த்தைகள் சுமூகத் தீர்வினையடையும் என்று இருதரப்பினரும் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

## சீன வெளியுறவு அமைச்சர்- ஐ. நா. செயலாளர் சந்திப்பு

பீக்கிங், ஆக. 5

ஐக்கிய நாடுகள் சபைப் பொதுச் செயலாளர் கலாநிதி வால்ட் ஹெய்ம் பீக்கிங்கில் சீன வெளிநாட்டமைச்சர் திரு. குவா-ஹுவோல்கைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினர்.

கலாநிதி வால்ட் ஹெய்ம் எட்டுநாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு சீன வந்துள்ளார்.

தமது விஜயத்தை முடித்துக் கொண்ட பின் கலாநிதி வால்ட்ஹெய்ம் தென்னுபிரிக்க விவகாரம் குறித்து ஆராயும் பொருட்டு லண்டனுக்கும் செல்லவிருக்கிறுர். (உ)

புதிய ஜனதிபதி தெரிவு:

## சைப்பிரஸும் கிரேக்கமும் கருத்து வேறுபாடு

லண்டன், ஆக. 5

சைப்பிரஸ் ஜனதிபதி ஆர்ச் பிஷப் மக்காரியோஸின் மறைவையடுத்து புதிய ஜனதிபதியைத் தெரிவு செய்வதில் கிரேக்கத்திற்கும் சைப்பிரஸுக்கும் இடையே கருத்து வேறுபாடுகள் தலைதூக்கியுள்ளன.

ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த பாராளுமன்றத் தலைவரான திரு. சைப்பிரியானே தற்காலிக ஜனதிபதியாக ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

ஜனதிபதியின் மறைவையடுத்து சைப்பிரஸில் 40 நாள் துக்கம் அனுஷ்டிக்கப்பட்டு வருவது தெரிந்ததே. (உ)





கிரமக்சோன்

வெங்காயம், மிளகாய்ப் பயிர்களைத் தாக்கும் புழுக்களைக் குறைப்பதற்கு உதவுகிறது.

உங்களது வெங்காயத்திற்கு மருந்து தெளிக்கும் போது அங்குள்ள புழுக்கள், வயலைச் சுற்றியுள்ள களைகளை நாடுகின்றன. கிரமக்சோன் பாவித்து வயலைச் சுற்றியுள்ள களைகளைக் கட்டுப்படுத்தி, களைகளில் உள்ள புழுக்கள் திரும்பவும் பயிரைத் தாக்காது காப்பாற்றுங்கள்.

CIC கெமிக்கல் இன்டஸ்ரீஸ் (கொழும்பு) லிமிடெட்.
த. பெ. இலக்கம் 352 கொழும்பு 1.

# தேர்தல்முடிவை தொடர்ந்து தொழிற்சங்கம் 'கலைப்பு?

யாழ்ப்பாணம், சனி

தேர்தல் முடிவுகளைத் தொடர்ந்து கலைக்கப்பட்டதாகக்கூறப்படும் ஒரு தொழிற்சங்கத்தின் யாழ். கிளை உறுப்பினர்கள் தங்களிடமிருந்து வசூலிக்கப்பட்ட நிதியின் கதி என்ன? என்ற கேள்வியை எழுப்பியுள்ளனர்.

யாழ் கட்டடத்திணைக்களத்தில் 76 ஜூலை மாதத்திலிருந்து அரசாங்க கட்டட நிர்மாணத் தொழிலாளர் சங்கம் இயங்கி வந்தது. தேர்தல் முடிவுகளைத் தொடர்ந்து இச்சங்கம் கலைக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

'றஜயே கொடனகிலி இதிகறண கம்கறு சங்கமய' என்று சிங்களத்தில் அழைக்கப்படும் இச்சங்கத்தின் பதிவு இலக்கம் 3695 ஆகும் என அச்சங்க உறுப்பினர்கள் தெரிவித்தனர்

வருடாந்த சந்தா தவிர வசூலிக்கப்பட்ட சுமார் 1500 ரூபாவின் கதி என்ன என்ற கேள்வி எழுப்பப்பட்டுள்ளது. (கூ)

## ஆர். ஆர். நல்லையா நியமனம்

கொழும்பு, வெள்ளி

"டைம்ஸ்'' பத்திரிகை நிறுவனத்தை அரசு பொறுப்பேற்றதை அடுத்து இவ் நிறுவனத்தின் தகுதிவாய்ந்த அதிகாரியாக திரு. போல் பெரேரா நியமிக்கப்பட்டுள்ளார். நிர்வாகிகளாக திரு. எச். ஜெயமகா, திரு. ஆர். ஆர். நல்லையா ஆகியோரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர்களாக முன்பிருந்த குழுவன்ன, சண்குணரட்ண, அயித்சித்தி, ஜே. சி. ஆர். கூறே ஆகியோர் தமது பதவிகளை இராஜினாமாச் செய்துள்ளனர்.

இந் நிறுவனத்தின் தகுதிவாய்ந்த அதிகாரியாக நியமிக்கப்பட்ட திரு. போல் பெரேரா நேற்று ஊழியர் மத்தியில் உரைநிகழ்த்தினார். (ம)

## இன்று நடக்கும் நாடகப் போட்டி

யாழ்ப்பாணம், சனி

அகில இலங்கை திருவள்ளுவர் மகாசபை நடாத்தும் நாடகப் போட்டி இன்றிரவு உடுவில் திறந்த வெளி அரங்கில் நடைபெறவிருக்கின்றன.

திரு. க. கிருஷ்ணராசா தலைமையில் நடைபெறவிருக்கும் இப்போட்டியில், உடுவில் உதவி அரசாங்க அதிபர் திரு. சி. குமாரசாமி பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். அண்மையில் சமாதான நீதவான்களாக நியமிக்கப்பட்ட திரு சி. அருச்சுனன் வைத்தியர் திரு. க. ஜோர்ஜ் ஆகியோருக்குப் பாராட்டும் இடம்பெறும். (ஈ-அ)

## நீலகண்டபாபா ஜெயந்தி விழா

யாழ்ப்பாணம், சனி

பகவான் ஸ்ரீ நீலகண்டபாபா ஜயந்தி தினம் கீரிமலை ஸ்ரீகிருஷ்ணர் கோவிலில் நாளை பரமாத்ம ஜோதிபேராசிரியர் ஸ்ரீ சத்யதாஸன் தலைமையில் கொண்டாடப் படுகிறது. (அ)

ரேட்டறி காணிவல்:

# மெய்மறக்கச் செய்யும் சர்க்கஸ் பசிபியா

—பற்றிமாகரன்—

இலங்கையின் தேசியகீதம் ஒலிக்கிறது. சர்க்கஸ் தொடங்கும் மகிழ்ச்சியில் ஆரவாரம் செய்கின்றனர் இரசிகர்கள்.

கட்டிளங்காளையர்கள் - கவர்ச்சிக்கன்னியர்கள் கூடவே கண்கவரும் இரு கோமாளிக்குள்ளர்கள்- அரங்கில்தோன்றி அணிவகுப்பு நடாத்துகின்றனர். ஆம்! சர்க்கஸ் பசிபியா ஆரம்பித்துவிட்டது.

### ஆணியிலே ஆரணங்கு

மஞ்சள் ஆடையிலே கெஞ்சும் விழியுடைய பெண்ஒருத்தி - அவள் கைகளிலே கனத்த இரு இரும்புக்குண்டுகள்-அவள் அவற்றை மேலே எறிந்து கைப்புயத்தில் தடுக்கின்றாள். நிலத்தில் படுக்கின்றாள். அவளுடைய மார்பின்மேல் மேசையில் ஏறிய குள்ளர்களில் ஒருவன் இரும்புக் குண்டுகளைப் போடுகிறான். கூரான பளபளக்கும் ஆணிகள்- அதன் மேல் சியஸ்ரா மெத்தையிலே படுப்பதுபோல் மெத்தெனப் படுக்கின்றாள் பளிங்குச்சிலை. அவளது உதரத்திலே சுத்தியலால் உரமாக அடிக்கின்றார்கள் இருஆடவர்கள். அவள் அமைதியாகப் படுத்திருக்கின்றாள். பார்க்கும்வாய்கள் எல்லாம் 'ஐயோ பாவம்' என முணுமுணுக்கின்றன. துள்ளி எழுகின்றாள் துடியிடையாள். கட்டுக்கூந்தலை அவிழ்த்துவிட்டு அதிலே 56 இருத்தல் நிறையுள்ள இருபடிக்கற்களைக் கட்டுகின்றாள் மெதுவாகக் கற்களைத் தூக்குகின்றாள். பார்க்கும் கண்கள் எல்லாம் அதிசயத்தால் விரிகின்றன. அவள் தலையை அசைக்கிறாள், ஆடுகிறாள், வேகமாகச் சுழல்கின்றாள். சீழ்க்கைஒலி விண்ணைப் பிளக்கிறது, கைதட்டலில் கொட்டகை அதிர்கின்றது.

### உருளையிலே நடனம்

உருளும் உருளையிலே அழகிய இளம் பெண்ணொருத்தி நிற்கின்றாள். இல்லை, தாளத்திற்கேற்ப நடனமாடிக்கொண்டிருக்கின்றாள். சின்னஞ்சிறுவர்கள் ஓடிவந்து அவள் தோள்களிலே தாவி ஏறுகின்றார்கள். அவள் அவர்களைக் கைகளிலே தூக்குகின்றாள். அவளது கழுத்தினிலே பருவக்குமரி ஒருத்தி பாய்ந்து ஏறுகின்றாள். இத்தனைக்கும் உருளும் உருளையிலே உல்லாசமாய் நிற்கிறாள் அவள்.

### கம்பத்தில் கழைக்கூத்து

நீண்ட மூங்கில் தடிஒன்றை கவர்ச்சிக்கன்னி ஒருத்தியின் கட்டுக்குலையாத தோள்களிலே வைக்கின்றார்கள். அதிலே தாவிஏறுகின்றான் சிறுவன் ஒருவன்; சமநிலைப்படுத்துகிறாள் அவள். கூடவே அந்த மூங்கிலில் ஏறும் சிறுமிஒருத்தி மூங்கிலின் நுனியில் நிற்கும் சிறுவனின் கைகளிலே ஊஞ்சலாடுகின்றாள். பார்ப்பவர்கள் மூக்கின்மேல் விரலை வைக்கின்றனர்.

### ஒற்றைச் சில்லில் ஒய்யாரப் பவனி

மூன்று ஒற்றைச் சில்லுச் சைக்கிளிலே முத்தான மூன்று அழகிகள் சுழன்று ஓடுகிறார்கள், குறுக்குநெடுக்காய் ஓடுகிறார்கள், பருவப் பாவையரைச் சுமந்துகொண்டு ஓடுகின்றார்கள் - ஆடுகின்றார்கள். அத்தனை அபாரம்

### கதிரை பலன்ஸ்

உலகப் பிரசித்திபெற்ற கதிரை பலன்ஸ் விளையாட்டு அடுத்ததாக ஆரம்பமாகியது. ஆறு கதிரைகள் விளிம்புகளிலே சமநிலையில் நிறுத்தப்படுகின்றது. வாலிபன் ஒருவன் முதலாவது கதிரையில் பருவக்குமரி பக்கத்துக்கதிரையில். இளம்பெண் ஒருத்தி இதற்கடுத்த கதிரையில், சின்னச் சிறுவன் ஒருவன் அதற்கடுத்த கதிரையில், பால்மணம் மாறாப் பச்சிளம் சிறுமி ஒருத்திஉச்சிக் கதிரையிலே தலைகீழாக நிற்கின்றார்கள். பார்க்கும் கண்கள் எல்லாம் அதிசயத்தால் விரிகின்றன.

### கரடியின் காட்சி

காட்டுக்கரடி ஒன்று உருளை ஒன்றில் ஏறி நின்று அதனை உருட்டி வருகின்றது. ஏணியிலே ஏறி-இறங்குகிறது. சிறுவர்கள் மகிழ்ச்சியால் துள்ளுகின்றனர்.

### ஆகாயப் பாய்ச்சல்

வானளாவ உயர்ந்துநிற்கும் கம்பத்தில் ஊஞ்சலில் ஊசலாடுகிறாள்ஒருபெண். அவளின் கைகளிலே தாவி விளையாடுகிறார்கள் இரு வாலிபர்கள். அந்தரத்தில் மனித உயிர்கள் ஆடுகின்ற ஆட்டத்தில் ஆடாது அசையாது இருக்கின்றது ரசிகர் குழாம்.

### பந்து பலன்ஸ்

பச்சை ஆடையிலே பளிங்குச்சிலை-அவள்வாயினிலே குச்சுத்தடி - அதிலே சுழல்கிறது பந்து. அவள் வாயிலுள்ள குச்சுத்தடியினால் பந்தை வானோக்கி எழுப்பி தலையால்- தோளால் - தொடையால் அடித்து ஒவ்வொரு முறையும் வாயில்உள்ளசிறுகுச்சினிலேயே தாங்கிச் சமநிலைப்படுத்துகின்றாள், இரசிகர்கள் மத்தியிலும் பந்தை வீசித் திரும்ப வீச வைத்து அதனை வாயிலுள்ள கோலால் சமநிலைப்படுத்துகின்றாள். பந்து கோலின் விளிம்பில்-அதன்மேல் ஐஸ்கிறீம் கோப்பைகள் கண்ணாடித் தம்ளர்கள் இப்படி எத்தனையோ பொருட்களை அடுக்கிவைத்துக் கொண்டு இசைக்கேற்ப நடனமாடுகிறாள் அந்தநங்கை.

### தீப்பந்தாட்டம்

இறுதியாகக் கும்மிருட்டில் கைகளிலே மூன்று தீப்பந்தங்களை ஏந்திச் சுழன்றாடுகின்றாள் அழகு மங்கை. மூன்று தீப்பந்தங்களில் ஒன்று எந்த நேரமும் அந்தரத்தில் இருக்கும்படியாக வேகமாகத் தீப்பந்தங்களை மாறிமாறி ஏந்தியபடி இசைக்கேற்ப நடனமாடுகின்றாள் அந்தச் சாகசக்காரி. இரசிகர்கள் மனமும் மகிழ்வினால் ஆடுகின்றது. இத்துடன் சர்க்கஸ் பசிபியா நிகழ்ச்சி முற்றுப்பெறுகிறது. சர்வதேசத் தரமுடைய சர்க்கஸ் ஒன்றைப் பார்த்த மகிழ்ச்சியுடன் மக்கள் வெளியேறுகின்றனர்.

### கரகாட்டம்

சர்க்கஸ் கூடாரத்திலிருந்து வெளியே வந்த என்னை மைதானத்தில் திறந்தவெளியரங்கில் நிகழ்ந்துகொண்டிருந்த கரக ஆட்டம் கவர்ந்திழுத்தது. இறக்குமதிச் சரக்கைப் பார்த்து மகிழ்ந்த என் கண்கள் உள்ளூர்ச் சரக்கான கரகாட்டத்தை நோக்கித் திரும்பியது.

### சேலை உடுத்தும் சாதனை

தலையிலே கரகத்துடன் சுழன்று ஆடியவண்ணம் நிலத்திலே படுத்து, பெண்களைப் போலச் சேலை உடுத்திக்காட்டினார் கரக ஆட்ட வீரர் அத்துடன் ஓயாது பயங்கரமான முறையில் தீ நாக்குகளை ஏந்தி நடனமிட்டுப் பார்ப்பவரை அதிசயத்தில் ஆழ்த்தினர் கரக ஆட்டக்காரர்.

### இலக்கிய விருந்து

ஆச்சரியத்தையே அளிக்கும் காட்சிகளைக் கண்டு ரசித்துக் கொண்டிருந்த எனக்குக் கரக ஆட்டத்தை அடுத்து நிகழ்ந்த 'கவிஞனின் காதலி, நாடகம் பெரும் இலக்கிய விருந்தாக அமைந்தது.






## இன்று

யாழ்ப்பாணம், சனி

யாழ். லயன்ஸ் கிளப் ஆதரவில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரிக்குமிடையில் 'உங்களுக்குத் தெரியுமா?' என்ற போட்டி ஒன்று நடைபெறுகின்றது.

இப்போட்டி சென். ஜோன்ஸ் கல்லூரி ஹென்றி பீற்றா ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெறுகின்றது. இப்போட்டிக்கு முன்னைநாள் யாழ். இந்துக் கல்லூரி அதிபர் திரு. என். சபாரத்தினம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

0 0 0

இன்று செங்குந்தா இந்துக் கல்லூரியின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி பி. பகல் 2 மணிக்கு கல்லூரித் திடலில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவிற்கு பிரதமவிருந்தினராக நல்லூர் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. கு. சோமசுந்தரம் கலந்து கொள்வார். (கா-அ)

## கூட்டணி எம். பி.க்களுக்கு வரவேற்பு

யாழ்ப்பாணம், சனி

தமிழர் விடுதலைக் கூட்டணி தேசியப் பேரவை உறுப்பினர்களுக்கு வரவேற்புவிழாவொன்று எதிர்வரும் 14ம் திகதி ஞாயிற்றுக்கிழமை வழக்கம்பரை அம்மன்வீதியிலுள்ள மோகன் அரங்கில் பண்ணாகம் மக்களால் வரவேற்பொன்று அளிக்கப்படவிருக்கிறது. (கெ-உ)

## வெங்கலச் சிலை

சென்னை, ஆக. 5

சுயமரியாதை இயக்கத் தலைவரும், பகுத்தறிவாளருமான அமரர். அழகிரிசாமிக்கு பாளையங்கோட்டையில் வெங்கலச் சிலை நிறுவப்பட விருக்கிறது

திராவிட முன்னேற்றக் கழகத்தலைவர் கலைஞர் மு. கருணாநிதி இச்சிலையைத் திறந்து வைப்பார். (கெ-உ)

வெலிங்டன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
விஜயகுமார் — ஜெய்சித்ரா
## தாய் இல்லாக் குழந்தை

லிடோ போன்: 7693 (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
ஜெய்சங்கர்—சுஜாதா
## நீ ஒரு மகாராணி

மனோஹரா (யாழ்ப்பாணம்)
தினசரி: 4 காட்சிகள்
எம். ஜி. ஆர்.-லதா - நாகேஷ் அறிமுகம் பவானி
நடித்த
## உழைக்கும் கரங்கள்
(ஈஸ்ட்மன் கலர்)

REGAL (JAFFNA) Daily: at 4-45, 7-00 & 9-30 p.m.
Christian Fechner the Creator of the "Crazyboys" now Presents his Most Hilarious Comedy to Date!
PIERRE RICHARD JANE BIRKIN
in
Claudezidis
## "THE GOOSE CHASE"
Color

கடைசி வாரம் 94-வது நாள்
ராணி (யாழ்ப்பாணம்)
எம். ஜி. ஆர். — லதா (இருவேடங்கள்) நடித்த
தினசரி 4 காட்சிகள்
## நாளை நமதே
(ஈஸ்ட்மன் கலர்)

கடைசிவாரம்
ராஜா (யாழ்நகர்) 88-வது தினம்
தினசரி 4 காட்சிகள்
போன்: 7180
தேவரின் **திருவருள்** (ஈஸ்ட்மன்கலர்)
குறிப்பு:- பாடசாலை மாணவர்களுக்கு விசேட ஆசனங்கள் ஒதுக்கிக் கொடுக்கப்படும். நிர்வாகத்துடன் முன்கூட்டியே ஒழுங்கு செய்து கொள்ளலாம்.

கடைசி வாரம்
ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - பத்மபிரியா
முத்துராமன் - சகுந்தலா
நடித்த
ஸ்ரீதரின் **வைரநெஞ்சம்**
(ஈஸ்ட்மன் கலர்)


### பயிற்சி

மொன்ரிசோறி ஆசிரியர் விசேட பயிற்சி, இப்பொழுது வகுப்பை நடத்திக்கொண்டிருக்கும் தராதரமற்ற ஆசிரியர்களும், தராதரம்பெற ஷெ பயிற்சியை விரும்பும் ஆசிரியர்களும் இப்பயிற்சியில் சேர்த்துக் கொள்ளப்படுவர். எதிர் வரும் 3-9-77 தொடக்கம் வகுப்பு ஆரம்பிக்கப்பட்டு ஆறுமாத காலப் பயிற்சியோடு முடிவடைந்தபின் தராதரப் பத்திரங்கள் வழங்கப்படும். வகுப்பு சனிக்கிழமை தோறும் காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணிவரை நடாத்தப் படும். விண்ணப்பங்கள் 30-8-77 வரை ஏற்றுக் கொள்ளப்படும். பதிவாளர் உயர்கலைக்கல்லூரி, ஆனைப் பந்தி, யாழ்ப்பாணம். 6778

### விற்பனைக்கு

அளவெட்டி தெற்கில், மல்லாகம் - சங்கானை ரோட்டில், சகல தளபாடங்களுடன் நவீன வசதிகள் உள்ள வீடும், வளவும் உடனடியாக விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: திருமதி. சாந்தா இரத்தின ஜெயா, 'மலர் இல்லம்', அளவெட்டி. 6766

கொக்குவில் சந்தி புகையிரத வீதியில் சுமார் 50 யார் காங்கேசன்துறை வீதியிலிருந்து தூரத்தில் நான்கு பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. விரும்புவோருக்கு பகுதியாக பிரித்து கொடுக்கப்படும் ஆதனத்திற்கு ஈட்டுப்பணம் கட்டுபவர்களும் விண்ணப்பிக்கலாம். 15-8-77 -க்கு முன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 6771 C/o ஈழநாடு. யாழ்ப்பாணம். 6771


நாகம்ஸ் (சுன்னாகம்)
தினசரி 6-30, 9-30
சனி ஞாயிறு 2-30
கண்ணப்பா - அஞ்சலிதேவி
**டவுண் பஸ்**

வெஸ்லி (மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
முத்துராமன்-சந்திரகாந்தா
**கலைக்கோயில்**

புலோலி சினிமாஸ் (பருத்தித்துறை)
தினசரி 6-30, 9-45
சனி, ஞாயிறு 2-30
**வளர்பிறை**


# வரி விளம்பரம்

### இனாம்

சென். பற்றிக்ஸ் கல்லூரியில் நடைபெறும் யாழ். றெரட்றிக் களியாட்டு மண்டபத்தில் அமைந்துள்ள மில்க்வைற் காட்சிச் சாலையில் சோப் வாங்கும் அன்பர்களுக்கு பல சிறந்த பரிசுப் பொருட்கள் அன்பளிப்பாகக் கொடுக்கப்படும். மில்க்வைற் தயாரிப்புக்களின் மேலுறைகளைச் சேகரித்து வைத்திருப்போர் அங்கு கொடுத்து இனாம் பொருட்களைப் பெற்றுக்கொள்ளலாம். மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம், யாழ்ப்பாணம். 6761

சென். பற்றிக்ஸ் களியாட்ட விழா மைதானத்தின் அண்ணா கோப்பி விளம்பர நிலையத்தில் விற்பனையாகிறது சோயாற்றின். ஒரு பைக்கட் சோயாற்றின் வாங்கி — 1 (B) பாய்க்கையும், 1 படத்தையும் இனாமாகப் பெற்றுக்கொள்ளுங்கள். 6762

### தேவை

நியூயோர்க் நகரில் தொழில் பார்க்கும் டாக்டர் தம்பதிகளின் ஆறு வயதிற்குட்பட்ட இரு பிள்ளைகளை பராமரிப்பதற்கு திடகாத்திரமுள்ள இளம்பெண், அல்லது நடுத்தர வயதுள்ள இந்துப்பெண் ஒருவர் தேவை. நல்ல எதிர் காலம் உண்டு. விண்ணப்பிக்கவும், திருமதி நடராசா, 341, கொழும்புத்துறைவீதி, யாழ்ப்பாணம். 6777

### தேவை

வார்ப்பு வேலை, லேத்வேலை, கம்மாலைவேலை, வெல்டிங் வேலை, பீற்றிங்வேலை தெரிந்தவர்கள் தேவை. நேரில்வரவும்: ராதாமெசின் கம்பனி, 95, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 6758

உங்களிடம் சேரும் வேப்பம், இலுப்பம், விதைகளை சுன்னாகம் மத்திய சந்தையில் 23-ம் இலக்கத்தில் அமைந்திருக்கும் "மல்ரிசொப்"பில் கொடுத்து பணத்தைப் பெற்றுக்கொள்ளலாம். மல்ரி சொப், 23, மக்கள் சந்தை, சுன்னாகம். 6763

யாழ்ப்பாணம் பெனின்சுலா கண்ணாடித் தொழிற்சாலைக்கு, டபிள் சிம்னியும் ஊதக்கூடிய திறமையுடன், நல்லொழுக்கமும் உள்ள ஊதுபவர் ஒருவர் தேவை. நேரில்வரவும். பெனின்சுலா கண்ணாடித் தொழிற்சாலை, 25, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 6760

யாழ். புகையிரத நிலையத்திற்கும் பஸ் நிலையத்திற்கும் இடையே 200 ரூபாவுக்குள் ஒரு வீடு வாடகைக்கு தேவை. ஆர். நமசிவாயம், 104, 4-ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். 6775

ஊதுபத்தி உருட்டுவதில் அனுபவமுள்ள இருபாலாரும் தேவை. உடன் வரவும். தி. திருநாவுக்கரசு, 466, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம். 6780

## இலவச கராட்டி காட்சி

காணத்தவறாதீர்கள்! அரிய சந்தர்ப்பம்!!

இடம்:

**சென்பற்றிக்ஸ் மைதானம்**

**காலம்: 6-8-77 சனி இரவு**

யாழ். ரோட்டரிச் சங்கத்தினரும் யாழ். சென்பற்றிக்ஸ் கல்லூரிப் பழைய மாணவரும் நடாத்தும் களியாட்ட விழாவில், யாழ். பெனின்சுலா கண்ணாடித் தொழிற்சாலையின் ஆதரவில் உலகப் புகழ்பெற்ற கராட்டி வீரர்கள், வீராங்கனைகள் இணைந்து அளிக்கும் கராட்டி நிகழ்ச்சி.

6768

## மரண அறிவித்தல்

### ஜோசப் பொன்ராஜா

ஜோசப் பொன்ராஜா - கொழும்பு புனித பெனடிக்ற்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணம் புனித பத்திரிசியார் கல்லூரி ஆகியவற்றின் இளைப்பாறிய ஆசிரியரும், புஷ்பத்தின் அருமைக் கணவரும், ராஜேஸ், ரட்ணேஸ், தர்மி, குலேந்திரன் (அரசினர் அச்சகம்) மகேந்திரன் (சிலோன் பிரின்டேர்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் அன்றுபற்றிக் (ஈடன் இன்டஸ்றீஸ்), கில்லறி சபாபதி (ஓமான்), ஜெறி மனுவற்பிள்ளை (கே, ஜீ. இன்டஸ்றீஸ்) ஆகியோரின் மாமனுருமான ஜோசப் பொன்ராஜா காலமானார். அன்னாரின் பூதவுடல் நல்லடக்கத்திற்காக இன்று மாலை 4-30 மணிக்கு 82, 3-ம் குறுக்குத் தெருவிலிருந்து புனித மரியாள் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். 6776


வின்ஸர் [யாழ்ப்பாணம்]
இப்பொழுது நடைபெறுகிறது
தினசரி 4 காட்சிகள்



சிவாஜி, மஞ்சுளா,
கமலஹாஸன், தேவிகா,
ஜெயசித்ரா,
எஸ். வி. சுப்பையா
நடித்த
## சத்யம்
டைரக்ஷன்: S. A. கண்ணன்
[ஈஸ்மன் கலர்]
[திரைக் கதை, வசனம்: வியட்நாம்வீடு சுந்தரம்]

RIO (Jaffna) Now Showing
Daily 10-30, 4-45, 7-15, 9-45 p.m.
ALAIN DELON
in
## THE ADVENTURERS

சாந்தி யாழ் நகர் போன்: 7642
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
என். டி. ராமராவ் — சௌகார்ஜானகி
## ராஜசேவை
(பயங்கர வாள் சண்டைகள் நிறைந்த படம்)

ஈழநாடு
EELANADU

# கல்வி அமைச்சருக்கு பாராட்டு

யாழ்ப்பாணம், சனி

புதிய கல்வியமைச்சர் கல்வித் துறையில் எடுக்கவிருக்கும் சீர்திருத்தங்களுக்கு தமது சங்கம் பூரண ஆதரவும் ஒத்துழைப்பும் வழங்குமென்று இலங்கை ஆசிரியர் சேவைச் சங்கத்தின் சார்பில் அதன் செயலாளர் திரு. இ. சுப்பிரமணியம் கல்வி அமைச்சர் திரு. நிசங்காவிஜயரத்னவுக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

கல்வித்துறையில் அமைச்சர் மேற்கொள்ளவிருக்கும் நடவடிக்கைகளுக்கு கடிதத்தில் பாராட்டும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இச் சங்கம் நீண்ட காலம் தோட்டப் பாடசாலைகளில் கற்பித்துப்பின்னர் அரசாங்கபாடசாலைகளில் கற்பிப்பவர்களின் சங்கமாகும். (அ)

## சாதனைத்தினவிழா

யாழ்ப்பாணம், சனி

திருநெல்வேலி விவசாயப் பாடசாலையின் சாதனைத் தின விழா இன்று பிற்பகல் நடைபெறுகிறது.

உதவி விவசாய விரிவாக்கப் பணிப்பாளர் திரு. எஸ் நடேசன் இவ்விழாவை ஆரம்பித்து வைப்பார். பொருட்காட்சி, கமக்காரர்களுக்கான செய்முறை வகுப்புக்கள், விவசாய கருத்தரங்கு ஆகியன விழாவினையொட்டி பயிற்சி வகுப்பு மாணவிகளால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன மாலை யாழ். விவசாய விஸ்தரிப்பு அதிபர் திரு. நா. சிவமுத்துலிங்கம் தலைமையில் பொதுக்கூட்டமொன்றும், பரிசளிப்புவைபவமும் நடைபெறும்.

## அமைப்பாளர்

யாழ்ப்பாணம், சனி

முன்னுள் விவசாயப்படை ஊழியர் சங்க யாழ்ப்பாணத் தொகுதி அமைப்பாளர்களாக திரு ஈ. தர்மராஜா, திரு. என். கனகராஜா ஆகியோரும் வட்டுக்கோட்டைத் தொகுதி அமைப்பாளராக திரு. எஸ். கனகசுந்தரமும் நியமிக்கப்பட்டுள்ளனர். (கு)



வேலர், அரிச்சந்திரன் தான் செய்த சத்தியத்தை நிறைவேற்றுவதற்காக மனைவி, பிள்ளை எல்லாம் இழந்தான் இந்தக்காலம் ஆர் அப்பிடிச் செய்யினம்.

மயிலர்: இந்தக்காலமோ காதல் கூதலிலை கல்யாணம் செய்யிறேனெண்டு சத்தியப் பிரமாணம் செய்து கொடுத்திட்டு கூதல் போக குறுக்காலை பாஞ்சிடுவாங்கள்,

— சுந்தர்

# ஜனாதிபதி கொள்கைத்திட்டவுரை—

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

றன. இக்குறைபாட்டுக்குப் பரிகாரந் தேட எனது அரசாங்கம் முனைந்து நின்று செயற்படும்.

மொழி, இலக்கியம், ஓவியம், நாடகத்துறை, திரைப்படத் தொழில் என்பவற்றுக்கு உரிய இடத்தை வழங்குவதன் மூலமும், கலைஞர்கள், கைவினைஞர்கள் யாபேரும் தத்தமது ஆக்கத் திறன்களை விருத்திசெய்வதற்கும், உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் அவற்றை பிரசித்திபெறச் செய்வதற்கும் அவர்களுக்குப் பூரண சந்தர்ப்பத்தையும், சுதந்திரத்தையும் வழங்குவதன் மூலமும் எமது நாட்டுமக்கள் மத்தியில் கலாச்சார மறுமலர்ச்சியை ஏற்படுத்த எனது அரசாங்கம் தீவிரமாக முயற்சி மேற்கொள்ளும்.

பிரதம அமைச்சர், அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோரும், உள்ளூராட்சிச் சபைகளின் உறுப்பினர்களும் முன்மாதிரியான நல்லொழுக்கமுடையோராகத் திகழவேண்டியது அவசியமாகும். சிறந்த ஒழுக்கத் தராதரத்தைக் கடைப்பிடித்தல், குறிப்பாக இலஞ்சம் மற்றும் ஏனையவகை ஊழல்களிலிருந்துவிடுபட்டிருத்தல் இங்கு முதற்தேவையாகின்றது. இது இவ்வாறு அமையுமெனில் மாத்திரமே, மக்கள் தமது அரசியற் தலைவரையும் அவரது இலட்சியங்களையும் பின்பற்றி ஒழுகத் தலைப்படுவர்.

முற்றிலும் தொழில்மய அடிப்படையிலும், தேட்டந்தேடும் அடிப்படையிலும் அமைந்திருப்பதும், தனது சொந்த நலனுக்காக மனிதனை மனிதன் சுரண்டி வாழ இடந்தருவதுமான, மனிதச் சூழலை மனிதனுனவன் தன்னகத்துள்ள உற்பத்திச் சாதனங்களின் துணைகொண்டு தன்சக பிரஜைகளைக் கட்டுப்படுத்தி வாழமுடியாதவொரு சூழலாக மாற்றியமைத்தற் பொருட்டு, இம் முயற்சிகள் மேற்கொள்ளப்படும் அதே வேளையில், தேட்டந்தேடுவதை நோக்காகக் கொண்டிராது, ஒவ்வொரு தனிநபரும் பிறரெல்லோருக்குமாகப் பணியாற்றவேண்டிய சமுதாயமொன்றில் வாழகூடிய வண்ணம், மனிதன் அவனது இயற்கையை மாற்றிக் கொள்வதற்கு உதவும் வழிவகைகளைக் காணுதலும் வேண்டும்.

எனவே, மேலிடத்திலுள்ளோரே முன்மாதிரியாக நடந்து காண்பித்தல் வேண்டும். இவ்வாறு முன்மாதிரியாக நடந்து காட்டுவதற்கு ஏனையோர் யாவரையும் விடப்பொருத்தமானோர் ஓர் அரசாங்க உறுப்பினரும், பாராளுமன்றத்திலுள்ள அவரின் சகாக்களுமேயாவர். பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும், அரசாங்க உறுப்பினர்களுக்கும் ஏற்புடையதான ஒழுக்கக் கோவையொன்றை எனது அரசாங்கம் தயாரிக்குமென்பதுடன், உறுப்பினர்களானோர் அதற்கிசைய ஒழுகுதலை உறுதிப்படுத்தவும் செய்யும். இத்தகைய அரசியற் தலைமை வழங்கப்படுமிடத்து, கட்சி அரசியலுக்கு அப்பாற்பட்டு, நம் யாவரினதும் தாய்நாட்டின் தலைவிதியை நிர்ணயிப்பதில் பாராளுமன்றத்தின் நிலையான குழுக்களூடாக எல்லாக்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களையும் ஒன்றுசேர்க்க முடியுமென எனது அரசாங்கம் கருதுகின்றது.

கடந்த ஆறு ஆண்டுகளில், இந்நாட்டில் முன்னர் எப்போதுமில்லாத விலையேற்றங்கள் நிகழ்ந்துள்ளன. இக்காலப் பகுதியின்போது, ரூபா நாணயத்தைக் கொண்டு, முன்னர் பெறக்கூடியதாயிருந்த அதே பொருளின் வரவரக் குறைந்த அளவையே பெறக்கூடியதாயிற்று, வாழ்க்கைச்செலவு அதிகரிப்பு, அரச கூட்டுத்தாபனங்கள், கூட்டுறவுச் சங்கங்கள் என்பவற்றில் ஊழல், ஏகபோகம் ஆதியன காரணமாக, மக்கள் தமது குடும்பத்தினருக்குத் தேவையான போஷாக்குச் சக்தியை வழங்கமுடியாது மனவேதனைப்பட்டதுடன் சிறுமை நிலைக்கும் ஆளானார்கள்.

நாளாந்தப் பாவனையிலுள்ள இறக்குமதிப் பொருட்களினதும், உள்நாட்டுப் பொருட்களினதும், செயற்கை ரீதியில் அதிகரிக்கப்பட்ட விலைகளைக் குறைப்பதன் மூலமும், உள்நாட்டு உற்பத்தியை அதிகரிப்பதன் மூலமும். தற்போது இமயமலை போலும் உயர்ந்துள்ள வாழ்க்கைச் செலவைக் குறைப்பதற்கு எனது அரசாங்கம் முதன்மையளித்து நடவடிக்கை மேற்கொள்ளும். மேலும், பாவனையாளர் சுரண்டப்படாதிருத்தலையும் எனது அரசாங்கம் உறுதிசெய்யும்.

வளர்ந்தோர் ஒவ்வொருவருக்கும் வாரமொன்றுக்குக் குறைந்தபட்சம் 8 இருத்தல் அளவான தானியம் உட்பட, போஷாக்கு நிறைந்த உணவு போதிய அளவில் மக்களுக்கு விநியோகிக்கப்படும்.

பாவனையாளர் பாதிப்படைய, கூட்டுத்தாபனங்கள் முறையற்ற இலாபம் ஈட்டுவது தடுக்கப்படும். பதிலாக, அவை, இயன்றவரை குறைந்த விலைகளில் அத்தியாவசியப் பொருட்களையும், சேவைகளையும் வழங்கிவருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் ஊழல் திறமையின்மை என்பவற்றின் பிடியிலிருந்து அவை விடுவிக்கப்படும்.

உற்பத்தியில் கூடிய திறமையை உறுதிசெய்யும் பொருட்டும், பாவனையாளர்கட்கு மிகவும் திருப்திகரமானதொரு சேவையை வழங்கும் பொருட்டும், புதிதாக ஆரம்பிக்கப்படும் மக்கள் துறை, மீள அமைக்கப்படும், அரசுத்துறை, கூட்டுறவுத்துறை என்பவற்றின் மூலம் போட்டி அடிப்படையிலமைந்த பொருளாதாரக்கொள்கையொன்றை எனது அரசாங்கம் செயற்படுத்தும். மேலும் விரும்பப்படுமிடத்து, இத்துறைகளுக்கிடையே இசைவொழுங்குகள் செய்யப்படுதலையும் அரசாங்கம் அனுமதிக்கும்.

இலங்கையில் நாம் உற்பத்தி செய்யக்கூடிய உணவுப் பொருட்களில், குறிப்பாக அரிசித் தொடர்பில் தன்னிறைவு காணுதல் எனது அரசாங்கத்தின் கொள்கையாகும். உண்மையில், 1967ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட மேலும் உணவு பயிரிடுதல் இயக்கச் செயற்பாட்டின் துரிதகதி, 1970ம் ஆண்டின் பின்னரும் பேணப்பட்டு வந்திருக்குமெனில் இக்காலகட்டத்தில் நாம் அரிசியில் தன்னிறைவு கண்டிருப்போம்.

உணவுற்பத்தியின் பயன்கள் உழுவோரைச் சென்றடைந்தாலன்றி உணவுற்பத்தி மாத்திரம் போதுமானதன்று. இந் நோக்கை எய்துவதற்கு எனது அரசாங்கம் பின்வருப் நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

(1) பண்ணை உற்பத்திப் பொருட்கள் மீது விதிக்கப்பட்டுள்ள செயற்கை முறையான விலைக்கட்டுப்பாடுகளை அகற்றுதல்;

(2) உத்தரவாத விலைத் திட்டத்தை விஸ்தரித்தல்;

(3) காணி அபிவிருத்திச் சட்டம் போன்ற அடக்குமுறைச் சட்டங்களைத் தீவிரமாக மாற்றியமைத்தல்;

(4) விசேட முன்னுரிமை அடிப்படையில் விவசாயிகளுக்குக் கடன் வழங்கி, அவர்களின் கடனுளி நிலையை ஒழிப்பதற்காக விவசாயிகள் கடன் சட்டமொன்றை நிறைவேற்றுதல்;

(5) விஞ்ஞான வழிமுறைகளின்படி விளைச்சலை அதிகரிப்பதன் பொருட்டு, விவசாயிகளுக்கு உதவுவதற்காக விவசாயிகளுக்கான கல்விநெறிகளை அறிமுகஞ் செய்துவைத்தல்;

(6) விவசாயிகளின் விளைச்சலை அதிகரிப்பதற்கும் அவர்களின் உற்பத்திப் பொருட்களைச் சந்தைப்படுத்துவதற்கும் உதவும்வகையில் அவர்களுக்கு விசேட உதவிகளை நல்குதல்;

(7) உற்பத்தி இலக்குகள் எய்தப்படுதலை உறுதிசெய்யும் பொருட்டு, வர்த்தக முகாமைத் துறைகளின் நுணுக்கங்களை விவசாயிகளுக்கு எடுத்துக்காட்டுதல்;

(8) விவசாயிகளுக்குப் போதிய உரத்தையும், ஏனைய சகாயவிலைப் பொருட்களையும் வழங்குதல்;

(9) விளைபொருட்களின் விநியோகம், சந்தைப்படுத்துகை என்பவற்றுக்காகச் சிறந்ததொரு போக்குவரத்துச் சேவையை வழங்குதல்.

நீர்ப்பாசன வசதிகளை வழங்கி, நிலத்தை மிகவும் உசிதமான முறையில் பயன்படுத்தி உற்பத்தியை அதிகரிப்பதற்கான வேலைத்திட்டமொன்றை எனது அரசாங்கம் செயற்படுத்தும். அதன் இலக்குகள் வருமாறு அமையும்:-

(i) வேலைவாய்ப்பு அளித்தல்;

(ii) காணியற்றோருக்கு காணி வழங்குதல்;

(iii) தோட்டத் தொழிற்றுறையைச் சாராததும் பயிரிடப்படக்கூடியதுமான நிலத்தை நியாயமான முறையில் பகிர்ந்தளிப்பதுடன், பொருளாதார வகையில் பயன்தரும் காணித் துண்டொன்றை விவசாயிக்கே சொந்தமாக்குதலை உத்தரவாதஞ் செய்தல்;

(iv) அத்தியாவசிய உணவுப்பொருட்களில் தன்னிறைவு காணும்பொருட்டு, காணி வளங்களை அதிசிறந்த வகையில் பயன்படுத்துதல்.

இவ் இலக்குகளை எய்துதற்கு பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்:

(அ) பயிரிடப்படாத நிலத்தின் பெருமளவான பகுதிகளில பயிர்ச்செய்கையை மேற்கொள்ளுதல், கிராமக் குளங்களைப் புனரமைத்தல், பயிர்ச்செய்கையின் கீழுள்ள நிலங்களின் பயிரிடப்படும் ஏக்கர் அளவுகளை அதிகரித்தல், இவற்றினால் வேலையற்றிருக்கும் பெருமளவானோருக்கு வேலைவாய்ப்பு வழங்குதல்;

(ஆ) கமநலக் கைத்தொழில்களைத் தாபித்தற்கு அதிகரித்த உதவி நல்குதல்;

(இ) போதிய அளவில் உணவையும், தளபாடங்களுக்குரிய மரத்தையும் பெற்றுக்கொள்வதற்காகப் பெருந்தொகையான மரம் நாட்டுதலை ஊக்குவித்தல்;

(ஈ) மூலதனம், நீர் வழங்கல், சந்தைப்படுத்துதல், தொழில்நுட்பச் சேவைகள், உரவகைகள் போன்ற இன்னோரன்ன ஒழுங்கமைப்புச் சேவைகளையும், உதவிகளையும் நல்குதல்;

(உ) ஏற்கனவே உள்ள கிராமிய நிறுவனங்களில் விவசாயிகளை எதிர்நோக்கும் தடைகளை நீக்குதலும், விற்பத்தி, விற்பனை ஆகிய இரு துறைகளிலும் விவசாயிகள் தாமே கூட்டுறவுச் சங்கங்களை ஏற்படுத்திக்கொள்வதை ஊக்குவித்தலும்.

(திங்கள் இதழில் தொடரும்).

## யாழ். இந்து

(1ம் பக்கத் தொடர்ச்சி)

திங்கட்கிழமை பிற்பகல் குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அன்றையதினம் பிரதம விருந்தினர்களாகதிரு. திருமதி. இ. சபாலிங்கம் கலந்துகொள்வார். (கா-அ)


# மரண அறிவித்தல்

## ஆர். எஸ். தர்மரத்தினம்

இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபன அமைப்பாளர் ஆர். எஸ். தர்மரத்தினம் காலமானார். இவர் காலஞ்சென்ற சுவாமிநாதர் சின்னம்மா ஆகியோரின் மகனும் காலஞ்சென்ற சின்னத்துரை விதானையார் இராசம்மா ஆகியோரின் மருமகனும் இராசலட்சுமியின் அன்புக் கணவரும் உதயகுமாரன் (யாழ் மக்கள் வங்கி), சிவகுமாரன் (பொறியியல் மாணவன் பேராதனை வளாகம்), தர்மகுமாரன், மீரா, இராஜகுமாரன், கலா, தேவகுமாரன், லதா, தயா, செல்வகுமாரன், யோககுமாரன் ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார். அன்னாரின் இறுதிச் சடங்குகள் இன்று சனிக்கிழமை மாலை 4 மணிக்கு புங்குடுதீவு மணல்காட்டு மயானத்தில் நடைபெறும்.

'விதானை இல்லம்' புங்குடுதீவு.

6786



# மரண அறிவித்தல்

## சிவசுப்பிரமணியசர்மா

வண்ணார்பண்ணை சிவசுப்பிரமணியசர்மா காலமாகிவிட்டார். இவர் சீதாலட்சுமியின் அன்புக்கணவராவார். அன்னாரின் பூதவுடல் இன்று சனிக்கிழமை காலை 10 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து ஈமக்கிரியைகளுக்காக கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்: எஸ். சர்வேஸ்வர சர்மா (வயலின் ஆசிரியர்) 479, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

6787


இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 5ந் திகதிஅச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu, Post Box No. 49, Jaffna. Telegram Eelnaadu Telephone 389, Registerd as „News paper in Sri Lanka;